மார்ச் மாதச் சிந்தனைகள்

SIGNUM FIDEI



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

2022



PUBLISHED BY

COMMUNICATION COMMISSION

SECTOR INDIA

டெலசால் அருட்சகோதரர்கள்
இந்திய மறைப்பணித்தளம்

## சிந்தனை தொகுப்பாளர் உரை

தவக்காலம் என்பது இயேசுவின் உயிர்த்தெழுதலை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான தயாரிப்பு மற்றும் சிந்தனைக்குரிய காலம். பொருளுள்ள தியாகத்தினை மனமுவந்து செய்யும் காலம். உடல் சார்ந்த தேவைகளைக் குறைத்து ஆன்மீக விழிப்புணர்வை அதிகரிக்கவும் இக்காலத்தில் நாம் அழைக்கப்படுகிறோம். இம்மாத நற்செய்திப்பின்னணியில் இந்த விழிப்புணர்வைப் பெற சிந்தனைத் தொகுப்புக்களைக் கருவியாக்கிக் கொள்வோம்.

அருட்சகோ. **ஜான் பெர்ணான்டோ** FSC
ரோம்




லசாலிய அழைப்பு என்பது வகுப்பறையே ஆலயமாக, மேஜையே பலிப்பீடமாக ஆசிரியரே பலிப்பொருளாகக் கொண்டு இளைஞர்களுக்கு அறிவு, ஞானம் அளிக்கும் **ஒரு தியாக வாழ்வு**

# லசாலிய இறையழைத்தல்

## கல்வி பணிக்கு இறைவன் அழைக்கிறார்

# வந்து பாருங்கள்

(யோவான் 1: 39)

தொடர்புக்கு
இறையழைத்தல் இயக்குநர்,
புனித வளனார் துறவற பயிற்சி இல்லம்,
மங்களகிரி, தூத்துக்குடி - 628 103.
தொலைபேசி : 9363518327.





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 பேதுரு 1:10-16

பதிலுரைப்பாடல்
98:1, 2-3 ab, 3c - 4

நற்செய்தி
மாற்கு: 10:28-31

புனித டேவிட்

மார்ச் 2022

**01**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

கிறித்துவை நாம் அனைவரும் நமக்கே உரிய தனித்துவமான வழியில் பின்பற்ற "எல்லாவற்றையும்" கைவிட அழைக்கப்படுகிறோம். நமது தனிப்பட்ட, தன்னலமிக்க, விழுமியங்களையும், விருப்பங்களையும் இறைத்திட்டத்திற்காக அவரின் பணிக்காக முழுமையாக காணிக்கையாக்க அழைக்கப்படுகிறோம். "என்னைப் பொறுத்தவரை இறைவனின் திட்டத்தையே ஏற்றுவேன் போற்றுவேன்" என்ற தெலசாலின் வாழ்வின் இறுதி சொற்றொடரின் மூலம் அவர் எப்படி வாழ்ந்தார் என்பதை அறிந்து கொள்கிறோம். அதுவே லசாலியனின் வாழ்க்கைத் தத்துவம்.

ஜெபம் :

இறைவா உமது திட்டத்தையே எல்லா வேளையிலும் ஏற்றவும் மேலும் போற்றவும் கூடிய வாழ்வினை, வாழுவதற்கான அழைப்பினை நாங்கள் பெருந்தன்மையுடனும், அன்புடனும் வாழ வரம் தாரும். ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் கவனிப்பில் இருப்பவர்களின் மனமாற்றத்திற்காக இறைமகன் இயேசுவிடம் தேவையான அருளை வேண்டுங்கள் (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
யோவேல் 2:12-18

பதிலுரைப்பாடல்
2 கொரிந்தியர் 5:20, 6:2

நற்செய்தி
மத்தேயு 6:1-6, 16-18

மொர்சியா
நகர்
புனித சாட்

மார்ச் 2022

**02**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

## சிந்தனைத் துளிகள்

ஜெபம், தவம் மற்றும் தானம் என்ற இம்மூன்று எளிய வார்த்தைகளை சிந்தனை செய்ய இன்று நாம் அழைக்கப்படுகிறோம். நமது தவ முயற்சிகளை இறைவன் மட்டுமே அறியும் வண்ணம், மறைவான வழியில் இக்குணங்களை வாழ முற்படுவோம். வாழ்வில் நம்மால் இயலும் என்று நாம் உணர்வதைவிட மேலான அற்புதங்களை இறைவன் நம் வாழ்வில் நிகழ்த்திக்காட்டுவார். தன்னலத்திலிருந்து அவர் நம்மை விடுவித்து ஒரு புதிய நிலையில் அனைவரையும் அன்பு செய்ய உதவுவார். புனித பசிலியுஸ் திருவிழாவிற்கான தியானத்தில் (தி.நூ. 136.1)"ஜெபமும் தவமும் நம்மை பெரிய நன்மைகளைச் செய்யத் தயார்படுத்தும்" என்று புனித தெலசால் எழுதுகிறார்.

ஜெபம் :

இறைவா, சமூகத்திற்கும் நான் சார்ந்துள்ள மத நெறிக்கும், நன்மை செய்ய ஜெபத்தையும் தவத்தையும் நான் முன்னெடுக்க அருள்தாரும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

கடவுள் உங்கள் மேல் தனது கொடைகளை பொழிய ஆர்வமாக உள்ளார். நீங்கள் அவற்றை பெற வேண்டும். உங்கள் அல்லல்களை கண்டு நீங்கள் பதட்டம் அடைவதைவிட உங்கள் மேல் கடவுள் கொண்டுள்ள இரக்கம் மேலானது. எனவே, உங்கள் அல்லல்களை மறந்து கடவுளிடம் அடைக்கலம் தேடுங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
இணைச்சட்ட நூல் 30:15-20

பதிலுரைப்பாடல்
திபா:1:1-2,3,4,6

நற்செய்தி
லூக்கா 9:22-25

புனித கேத்ரின் டிஜேஸ்

மார்ச் 2022

03

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

## சிந்தனைத் துளிகள்

இவ்வுலகில் இறைவனின் அருள் நமக்கு வேண்டுமெனில் நாம் நமது நிலைவாழ்வுக்காகவும், மற்றவர்களின் நலனுக்காகவும், உழைக்க நம்மில் உள்ள சிலவற்றை தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும். அது நமது எதிர்மறையான எண்ணங்களாகவோ மனப்பான்மையாகவோ அல்லது நாம் பெரிதும் விரும்புகின்ற செயல்களாகவோ, பொருட்களாகவோ, இடமாகவோ அல்லது ஆட்களாகவோ இருக்கலாம். இத்தகைய தவமுயற்சி மேற்கொள்வது மிகக் கடினம், அதற்கு இறைவனின் ஆழமான அன்பு தேவை. புனிதத்தைத் பின்தொடர்வது எல்லாவற்றையும் விட முக்கியமானது. "மாணவர்கள் புனிதத்தன்மையைப் பெறுவதற்கு அர்களுக்கு உதவ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்." (தி.நூ. 39.2) என தெலசால் நமக்கு நினைவுபடுத்துகிறார்.

ஜெபம் :

இறைவா, மற்றவர்கள் / மாணவர்கள் புனிதத்தன்மையைப் பெற அழைக்கப்பட்டிருக்கும் நான், அப்புனிதத்தன்மையை முயன்று பெறுவதற்கானத் தூண்டுதலை என்னில் உருவாக்கிட அருள்தாரும், ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

உங்கள் துயர நேரங்கள் நீங்கள் உங்களையே கடவுளின் கைகளில் ஒப்படைக்க உங்களை வேண்டுகிறேன். (கடிதம் - 102)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 58:1-9

பதிலுரைப்பாடல்
திபா:51:1-2, 3-4, 16-17

நற்செய்தி
மத்தேயு 9:14-15

புனித கசிமீர்

மார்ச் 2022

**04**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்ணான்டோ FSC

திருமண நிகழ்வு என்ற உருவகத்தை கையாளுவதன் வழியே இயேசு எவ்வளவு நெருக்கமான உறவு முறையில் நம்முடைன் இருக்கிறார் என்பதை நமக்குத் தெரியப்படுத்துகின்றன. இந்நேரங்கள் மகிழ்ச்சியான காலங்கள். வெள்ளிக்கிழமைகள் இயேசுவின் இறப்பையும் அவர் மரணித்த போது மறைந்து இருந்த குறைவான காலத்தை நினைவுப்படுத்துகின்றன. ஆனால் அவர் மீண்டும் திரும்பி வந்து, நம்முடன் என்றும் உடனிருந்து அன்பு, மகிழ்ச்சி, மற்றும் அமைதியைக் கொண்டு வருவார். ஆண்டவரே, என்னுடனான உமது உறவிற்காக நான் மகிழ்ச்சியுடன் பதிலளிக்க விளைகிறேன். "உள்ளார்ந்த நினைவூட்டல் (Interior recollection) வழியாக இறைவனின் உடனிருப்பினை அனுபவிப்பதை எனிதாக்கும்" (தி.நூ. 179.3) என தெலசால் நமக்கு அறிவுரை வழங்குகிறார்.

ஜெபம் : இறைவா உமது உடனிருப்பை நான் முனைந்து அனுபவிக்கும் வரத்தைத் தாரும், எனது தவமுயற்சிகள் எனக்கு உதவ அருள்தாரும், ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நீங்கள் என்மேல் கொண்டுள்ள அன்பு என்னை மனம் நெகிழச் செய்தது. (கடிதம் - 92)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எசாயா 58:9-14

பதிலுரைப்பாடல்
திபா. 86:1-2, 3-4, 5-6

நற்செய்தி
லூக்கா 5:27-32

புனித சிலுவை
யோவான்
யோசேப்பு

மார்ச் 2022

**05**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

## சிந்தனைத் துளிகள்

இன்றைய நற்செய்தியில் மூன்று முக்கிய நிகழ்வுகளைக் காண்கிறோம்; இயேசு பாவிகளை அழைக்கிறார், உறவைக் கொண்டாடுகிறார், மற்றும் மனந்திருப்ப அழைக்கிறார். இயேசுவின் வழியைப் பின்பற்றுவதற்கான அழைப்பினையும், அர்ப்பணிப்பையும், நம்பிக்கையினையும் உள்ளடக்கியது, இயேசுவின் அழைப்பில் அன்பையும் இரக்கத்தையும் லேவி உணர்ந்தார். இறைவனின் குடும்பத்தில் இணைவதற்கு மதிப்பீட்டிற்கான அழைப்பு உணர்த்தியது. புனித தெலசாலின் வாழ்விலும் இந்த 'மாற்றம்' இருந்தது, அவர் ஒரு உலகத்திலிருந்து வெளியேறி முற்றிலும் முரண்பட்ட மற்றொரு உலகத்திற்கு அடியெடுத்து வைத்தார். "முக்கிய மாற்றம் இதயத்தின் மாற்றமாகும் என்பதையும் அது இல்லாமல் மனமாற்றம் மிகவும் மலட்டுத்தன்மை கொண்டது என்பதையும் உறுதியாக நம்புங்கள்" (தி.நூ. 175.2) என தெலசால் அறிவுறுத்துகிறார்.

ஜெபம் : அன்பு இறைவா, நீர் எங்கு சென்றாலும் நான் உம்மைப் பின்தொடரவும் உம் அழைப்புக்குத் தாராளமாக பதிலளிக்கவும் அருள்தாரும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

கடவுள் உங்களுக்கு ஞானத்தை தர வேண்டுகிறேன். அப்போதுதான், நீங்கள் எவ்வளவு ஆழமான பாதாளத்திலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறீர்கள் என்றும், கடவுளின் முடிவில்லா அன்பே உங்களை காப்பாற்றியது என்றும் உணர்ந்து கொள்வீர்கள். (கடிதம் – 110)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
இச 26:4-10

இரண்டாம் வாசகம்
உரோ 10:8-13

நற்செய்தி
லூக்கா 4:1-13

தவக்காலம்
முதல் ஞாயிறு

மார்ச் 2022
**06**
ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

தாமாக அல்லது தற்செயலாகவோ இயேசு பாலைவனத்திற்கு "அழைத்து" செல்லப்படவில்லை மாறாக ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார். எனவே இந்த பாலைவன அனுபவம் என்பது தந்தையின் திருவுளம். வாழ்க்கையில் வரும் துன்பங்கள் சுமையாகவோ, கடுமையான உணர்ச்சியாகவோ, உளவியல் வலியாகவோ இருந்து ஆன்மீக வலியை ஏற்படுத்துகிறது. இறைவார்த்தையை உறுதியாக பற்றிக்கொள்வதன் மூலம் இயேசு சோதனைகளை எதிர்த்தார். இச்சோதனைகளுக்குப்பிறகு இறைவனின் திருமகனாக தெளிவாக வெளிப்படுகிறார், "சோதனை மற்றும் துன்பங்கள் என்பது இறைவன் நம்மீது கொண்டுள்ள அளப்பரிய அன்பைக்காட்டும் அறிகுறிகளில் ஒன்றாகும்; மேலும் எதிர்த்து நிற்கும் மனவலிமையை அளித்து நம் இவ்வுலகப் பயணத்தில் வலிமையோடு எதிர்கொள்ள இறைவன் வாய்ப்பளிக்கிறார்."

ஜெபம்: என் இறைவா, சோதனை மற்றும் துன்ப வேளையில் நீர் என்னை அதிகமாக அன்பு செய்கிறீர் என நான் உணர்ந்து கொள்ளும் வரம் தாரும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

நற்செய்தியை ஆழ்ந்து சிந்திப்பதன் வழியாகவும், அதை உங்கள் மனதில் பதிப்பதன் வழியாகவும் அதனை நீங்கள் சிறப்பாக அறிந்துள்ளீர்கள் என்பதில் உறுதிகொள்ளுங்கள். (MSF)

# இறைவார்த்தையோடு
# லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
லேவி 19:1-2, 11-18

பதிலுரைப்பாடல்
திபா : 19:7,8,9,14

நற்செய்தி
மத்தேயு: 25:31-46

புனித பேர்பச்சுவா
ஃபெலிசித்தா

மார்ச் 2022

07

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

இயேசு தம்மை விளிம்பு நிலை மாந்தர்களோடு அடையாளப்படுத்தினார். அவர் தன் வாழ்வு முழுவதும் விளிம்பு நிலை மக்களோடு, மக்களாகவே வாழ்ந்தார். இன்றைய நற்செய்தி, தனிமனித மாண்பின் மீதும் கண்ணியத்தின் மீதும நாம் அக்கறை கொள்ள வேண்டுமென அழைக்கிறது. "நாமும் இயேசுவைப் போல நாம் கற்றுக் கொடுக்கும் ஏழ்மை நிலையிலுள்ள மாணவர்களில் இயேசுவை அடையாளம் காணவும்; அவர்களில் இயேசுவை வணங்கவும், வறுமையை விரும்பவும் வேண்டும்; மூன்றரசர்களைப் போல ஏழைகளை மதிக்கவும் வேண்டும். இவ்வாறு நடந்தால் இயேசு மகிழ்வார்" (தி.நூ 96:3) என்பதை வலியுறுத்துகிறார் புனித தெலசால்.

ஜெபம் : அன்பு இறைவா, ஏழைகளில் உம்மை அடையாளம் காணவும் அவர்களுக்கு பணிவிடை செய்வதில் நிறைவுகாணும் ஆர்வத்தை எனக்குத் தந்தருளும், ஆமென்.

**தெலசாலின் பொன்மொழி**

நமது ஆன்மாவை வலுவூட்டுவதற்கு தம் மகனையே தரும் அளவிற்கு கடவுள் நம்மீது கனிவு கொண்டுள்ளார். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

"விண்ணகத்தில் இருக்கிற எங்கள் தந்தையே" என்ற ஜெபம் ஐந்து செயல்பாடுகளால் ஆனது. அவைகள் ஆராதித்தல், வருந்ததுதல், நன்றி செலுத்துதல், வேண்டுதல் மற்றும் இறைவனின் அன்பினை உணருதல். இறைவனை தந்தையென அறிக்கையிட்டு அவரை மாட்சிப்படுத்துவதும், விண்ணில் காணப்படும் அன்பு, இரக்கம் மற்றும் நேர்மறையான மனப்பான்மைகள் மண்ணிலும் நிலவவிரும்புதலும், பகிர்ந்து மகிழ்வதற்காக நமது தேவைகள் நிறைவு செய்யப்படவும், நம்மைத் தாழ்த்தி நமது பாவநிலையை அறிக்கையிட்டு மன்னிப்பு வேண்டி நாமும் "மன்னிப்போம்" (தி.நூ. 74:3) என்று உறுதி கொண்டு எல்லாத் தீமைகளிலிருந்தும் நம்மைக்காக்கும் அவரின் அன்பினை நம்பி நமது வேண்டுதலை நிறைவு செய்வதே இம்மன்றாட்டின் மேன்மை, இந்த மன்றாட்டு இயேசு கற்பித்த நல்லிணக்க மன்றாட்டு என்பதை உணர்ந்து நம் இந்திய நாட்டின் பண்பாட்டு பன்மையைப் போற்றி அதனை நனவாக்குபவர்களாக வாழ முனைவோம்.

ஜெபம் : எண்ணற்ற வழிகளில் என்னிடம் பேசும் இறைவா, உமது குரலுக்கு செவிசாய்க்கவும் பணிந்து நடக்கவும் உம்மை அன்பு செய்யவும் வரம் தாரும். ஆமென்.

முதல் வாசகம்
எசா 55:10-11

பதிலுரைப்பாடல்
திபா: 34:3-4,5-6,15-16,17-18

நற்செய்தி
மத்தேயு 6:7-15

இறைவனின் புனித ஜான் துறவி

மார்ச் 2022

**08**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் மாணவர்கள் மீது அதிக அன்பும், அக்கறையும் காட்ட வேண்டும். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
யோனா 3;1-10

பதிலுரைப்பாடல்
திபா : 51:1-2,10-11,16-17

நற்செய்தி
லூக்கா 11:29-32

உரோமை நகர்
புனித
ஃபிரான்சஸ்

மார்ச் 2022

**09**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

இறைவனின் பார்வையிலிருந்தும் அவர் கொடுத்த பணியிலிருந்தும் தப்பி ஓடிய யோனா, நினிவேக்குச் செல்ல விரும்பவில்லை. அவரது விருப்பத்திற்கு மாறாக ஒரு திமிங்கலத்தின் வயிற்றில் அடக்கப்படுகிறார். அதன் பின்னரே இறைவனுக்குக் கீழ்படியலானார். ஆயினும் தன் முழுமன நிறைவோடு அதை செய்திருப்பாரா ன்பது ஒரு கேள்வியே. இருந்தாலும் அவருடைய தூது பயனுள்ளதாக அமைந்தது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியும் எண்ணற்ற வாய்ப்பும் இருந்தாலும் அதனை நமது ஆன்மீகத் தூண்டுதலுக்கு உட்பட்டு அதனை பயன்படுத்த தவறிவிடுகிறோம். "இறை வழிகாட்டுதலைப் பெற நாம் கொண்டிருக்க வேண்டிய நற்குணங்களாக புரிதலும் மற்றும் ஆய்ந்து தெளியும் அறிவும் நமக்கு உதவும். அவை நமக்குமட்டுமல் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் வழிகாட்டுதலுக்கு உதவ இறைவனை மன்றாட" (தி.நூ. 33:1) வேண்டுமென புனித தெலசால் அறிவுறுத்துகிறார்.

ஜெபம் : என் இறைவா, உமது வழிகாட்டுதலைப் பெறத் தேவையான புரிதலையும் ஆய்ந்து தெளியும் ஆவியானவரையும் எனக்கு அருள்வீராக ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

வெறும் வாய்சொற்களைவிட எடுத்துக்காட்டான வாழ்வு பிறரை மிகவும் கவரும். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எஸ்தர் (கி) 4:17

பதிலுரைப்பாடல்
திபா : 138:1-2, 3,7,8

நற்செய்தி
மத்தேயு 7:7-2

அர்மேனியாவின் நாற்பது மறைசாட்சிகள்

மார்ச் 2022

**10**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் திறப்படும் என்கிறார் இயேசு, அன்னை மரியாள, இறைவனின் திருவுளத்தைக் கேட்டாள் தெளிவுபெற்று "இதோ உமது அடிமை உமது வார்த்தையின்படியே ஆகட்டும்" என்றாள். கானாவூர் திருமணத்தில் (யோவான், 21:12) அடுத்தவர்களின் தேவைகளைக் கேட்டாள் இறைவனின் திருவுளத்தையும் மற்றவர்களின் தேவையையும் முன்னிருத்தும் போது நாம் பெறுகிறோம், கண்டடைகிறோம் நமக்குத் தேவையானது திறக்கப்படுகிறது. "உங்கள் மாணவர்களின் தேவைகளைத் தொடர்ந்து இயேசுவிடம் முன்னிலைப்படுத்தி, அவர்களை வழிநடத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துரைத்து, அவரே அனைத்தையும் செய்யக்கூடியவர் என்று நம்பி, அவரால் மட்டுமே இயக்கப்படக் கூடிய கருவியாக நீங்கள் இருப்பதால், நீங்கள் அவரிடம் கேட்பதை அவர் உங்களுக்கு வழங்குவதில் தவறமாட்டார்" (தி.நூ. 196:1) என்பதை புனித தெலசால் உறுதி செய்கிறார்.

ஜெபம் : என் இறைவா, உம் திருவுளம் நிறைவேறவும், உம்மிலே நான் சரணடையவும், உம் திருவுளமே நிறைவானது என நம்புகிறேன். ஆமென்.

### தெலசாலின் பொன்மொழி

பிறர் மீதான விருப்பமின்மையும், வெறுப்புணர்ச்சியுமே நமது செபங்களை கடவுளிடம் கொண்டு செல்ல தடையானவை. (கடிதம் – 105)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசே 18:21-28

பதிலுரைப்பாடல்
திபா : 130:1-2, 3-4, 5-7, 8

நற்செய்தி
மத்தேயு 5:20-26

கோர்டோபா நகர்
யுலோசியுஸ்

மார்ச் 2022

**11**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்ணான்டோ FSC

நாம் அனைவரும் நிலைவாழ்வை அடைய விரும்புகிறோம். அதுவே நமது வாழ்வின் முதன்மையான குறிக்கோளாகவும் இறுதி இலக்காகவும் இருக்க வேண்டும். ஆனால் வாழக்கையின் "மினி இலக்குகள்" என்று நாம் அழைக்கக்கூடிய தினசரி நிறைவுகள் அதாவது பொழுதுபோக்கு, பணம், வெற்றி இவைகளில் நாம் சிக்கிக் கொள்கிறோம். நம் செயல்களை ஆராய்ந்தால் நாம் எதற்கு முதன்மை தருகிறோம் என்பதை உணர்ந்து கொள்ளலாம், வாழ்வின் இறுதி இலக்கை நாம் அடையும் பாதையாக இயேசு காட்டுவது "நீதி". அது உண்மையாகவும் இயல்பாகவும் இருப்பது. நாம் நேர்மையாகவும் உண்மையைப் பிரதிபலிப்பவர்களாகவும் வாழ்வோம். "ஒவ்வொரு நிமிடமும் நம்மை இறைவனுக்கு அர்ப்பணித்து நமது அன்றாட கடமையிலும் பணியிலும் வெளிச்செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிறைவடையாமல், இறையுணர்வோடு அனைத்தையும் செய்யவேண்டும்" (தி.நூ. 58:1) என புனித தெலசால் வழிகாட்டுகிறார்.

ஜெபம் : அன்பு இறைவா, நான் செய்யும் அனைத்துப்பணிகளிலும், என் வாழ்க்கையில் நான் தேடும் அனைத்திலும், நேர்மையாக இருக்கவும், உம்மை மட்டுமே அன்பு செய்யவும் அருள்தாரும். ஆமென்.




### தெலசாலின் பொன்மொழி

நாம் நம்மையே முழுவதும் கடவுளின் பராமரிப்பில் ஒப்படைக்கும் போது, நம்மை காக்கும் கடவுள் வழிநடத்துவார். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
இச 26:16-19

பதிலுரைப்பாடல்
திபா. 119:1-2,4-5,7-8

நற்செய்தி
மத்தேயு 5:43-48

புனித
தியோபனஸ்

மார்ச் 2022

**12**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

இறைவன் இயேசு நாம் "முழுமையாக " வாழ இன்று நமக்கு அழைப்பைத் தருகிறார். இது தான் " உயர்ந்த அழைப்பு". வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் இறைவனின் அருளில் வாழ முயலும் போது நாம் வாழ்வின் முழுமையை அடைகிறோம். அவரையே நம்பி, அவரையே எதிர்நோக்கி, அவருக்காக அவரில் சரணடைந்து வாழ்வது என்பது ஒரு மேலான அழைப்பு. பகையுள்ள இடத்தில் அன்பையும், கயமை நிறைந்த இடத்தில் மன்னிப்பையும், ஐயம் சூழ்ந்த இடத்தில் நம்பிக்கையையும் பெற்று ஒவ்வொரு நொடிப்பொழுதும் வாழ்வோம். புனித அசிசி பிரான்ஸிஸைப் போல அந்த முழுமையை வாழவோம். இவைகள்தான் மிகவும் தேவையான நடைமுறை மற்றும் முழுமையை அடையும்வ வழி என்று இயேசு போதித்தார். "வழிதவறி த வறு க ளில் சிக்கிக் கொள்ளாமல் நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்" (Med. 5:2) என்று தெலசால் நம்மை அறிவு றுத்துகிறார்.

ஜெபம் : என் இறைவா, நான் புனித தன்மையுடன் வாழ விரும்புகிறேன். என் வாழ்வின் ஒவ்வொரு நொடியும் உமக்காகவும், உம்மிலும் உம்முடனும் வாழ எனக்கு அருள்தாரும். ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

தம்மை பின்தொடர்ந்த மக்களின்மீது இரக்கம் காட்டி, புதுமைகள் செய்து அவர்களின் பசியை போக்கிய இயேசுகிறிஸ்துவின் நன்னைதன்மையை நினைத்து வியப்புறுவார்கள். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தொ.நூ. 15:5-12, 17-18, 21

இரண்டாம் வாசகம்
பிலி 3:17-4:1

நற்செய்தி
லூக் 9:28-36

தவக்காலம் 2-ம் ஞாயிறு

மார்ச் 2022

**13**

ஞாயிற்றுக்கிழமை

இன்றைய நற்செய்தியின் மூன்று நிலைப்பாடுகளை தியானிக்க அழைக்கப்படுகிறோம். முதலாவதாக இயேசுவின் அடையாளமும் மகிமையும் - அவரின் அடையாளத்தின் திகைப்பூட்டும் சான்றாக அமைகிறது. அவரின் மாற்றப்பட்ட தோற்றம் அவர் கடவுளின் தெய்வீக மனிமையின் ஆதாரமாக இருப்பது உறுதி செய்யப்படுகிறது. இரண்டாவதாக, மோசேயுடனும் மற்றும் கூறப்பட்ட அனைத்தும் நிறைவேற்றப்படுவதை சுட்டிக்காட்டுகிறது. மூன்றாவதாக இறைவனின் குரல் மற்றும் அவரின் உடனிருப்பு - இயேசுவின் செய்திக்குப் பணிந்து நடக்க சீடர்களை அழைக்கிறது. இம்மூன்றும் ஜெபச்சூழலில் நடப்பதைக் காணும் போது நம்மையும் ஜெபச்சூழலை இறை அனுபவமாக மாற்ற அழைக்கிறது. ஜெபம் என்பது நம் வாழ்வில் இறைவல்லமை வாய்ந்த இருப்பதை தேடுவதாக இருக்க வேண்டும். "தனிமையிலும் ஜெபத்திலும் மட்டுமே ஓர் ஆன்மா உண்மையான உருமாற்றத்தை அடைய முடியும் அல்லது தன்னை மாற்றிக்கொண்டு முழு இறைஞானத்தை பெறமுடியும்" (தி.நூ. 152:3) என்பதை புனித தெலசால் நினைவுப்படுத்துவதை மனதில் கொள்வோம்.

ஜெபம் : என் அன்பு இயேசுவே, உம்மில் நான் பெறும் இறையனுபவம் என்வாழ்வில் நான் எதிர்கொள்ளும் துன்பங்களையும் சவால்களையும் கடந்து செல்ல உமது அருளாக அமையட்டும். ஆமென்.

### தெலசாலின் பொன்மொழி

செபங்கள் கடவுளின் அன்பையும், அருளையும் பிறர்மீது பொழிய செய்கின்றன.(கடிதம் - 5)

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தானியேல் 9:4-11

பதிலுரைப்பாடல்
திபா. 79:8,9,11,13

நற்செய்தி
லூக் 6:36-38

புனித
மெட்டில்டா

மார்ச் 2022

**14**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

இரக்கமுள்ளவர்களாய் இருங்கள். அதுவும் தந்தை இரக்கமுள்ளவர்களாக இருப்பதைப் போல இரக்கமுள்ளவர்களாய் இருக்க இயேசு அழைக்கிறார். கருணையுடன் இருத்தல் என்ற அழைப்பு எளிதான அல்லது விரும்பிய அழைப்பு அல்ல. இரக்கமுள்ளவர்களாக இருப்பது என்பது நல்ல செயல்கள் செய்வதாக இருக்கலாம். ஆனால் இயேசு முதன்மையாக நமக்கு சவால் விடுவது, மற்றவர்களைத் தீர்ப்பிடாதே, கண்டனம் செய்யாதே, மேலும் உங்களைக் காயப்படுத்தியவர்களை மன்னியுங்கள். இயேசுவைப் பின்பற்ற விரும்பினால் நாம், நம்மைக் காயப்படுத்தியவர்களை மன்னிக்க வேண்டும். "இயேசு கிறிஸ்துவில் இறைவன் மன்னித்தது போல " ஒருவரையொருவர் பெருந்தன்மையுடனும், மென்மையாகவும், விட்டுக்கொடுத்து மன்னிப்பவர்களாக இருப்பதற்கும், இயேசு கிறிஸ்து அவர்களை அன்பு செய்தது போல ஒருவரையொருவர் அன்பு செய்யவும் நீங்கள் மாணவர்களுக்கு உதவ வேண்டும்" (தி.நூ. 198:3) என்றும் நாம் மன்னிப்பதனால் நமது பணியில் அது எவ்வாறாக உதவுமென்று புனித தெலசால் அறிவுறுத்துகிறார்.

ஜெபம் : இறை இரக்கத்தை வாழ்ந்து காட்டிய அன்பு இயேசுவே, நானும் உம்மைப்போல மன்னிப்பை வழங்கி மன்னிப்புபெற கற்றுத்தாரும். ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் கடவுளின் பணியை செய்கிறீர்கள், கடவுள் உங்களை பாதுகாப்பார் என்பதில் உறுதியாக இருங்கள். அவரது பணியை விசுவாசத்துடன் செய்யுங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 1:10, 16-20

பதிலுரைப்பாடல்
திபா. 50:8-9,16,17,21-23

நற்செய்தி
மத்தேயு 23:1-12

புனித லூயிஸ் தே மரிலாக்

மார்ச் 2022

**15**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்ணான்டோ FSC

பாராட்டப்படவும், அங்கீகரிக்கப்படவும் விரும்புவது மனித இயல்பு. அதனை தவறான வழியிலோ, உலக அரசியல் செயல்பாட்டினாலோ, அதனை அடையய பல வழிகளைத் தேடுகிறோம். நாம் செய்யும் பணியினாலும் அல்லது சிறிய செயல்களானாலும் அதனை மிகைப்படுத்திக் காட்ட முனைகிறோம். நம்மையாராவது விமர்சித்தாலோ அல்லது தவறாக நினைத்தாலோ அல்லது நம்மைப்பற்றி யாராவது எதிர்மறையாக சொன்னாலோ அல்லது நாம் கேள்விப்பட்டாலோ நாம் பெரிதும் மனச்சோர்வடைகிறோம். நமது ஆளுமையும் நாம் கட்டியமைத்துள்ள பெருமையும் காயப்பட்டதாக வருந்துகிறோம். இந்நிலையில், பணிவு முரண்பாடாகத் தெரிகிறது. மனத்தாழ்ச்சி என்ற நற்பண்பை நாம் கண்டுணரும் வரை அது நம்மைப் புணப்படுத்தும். ஆனால் பணிவு என்பது ஒரு நற்பண்பு. அது நம்மை உண்மையாக இருக்க உதவுகிறது, தவறான ஆளுமையைக் குறைத்து நாம் யாராக இருக்கிறோம் அல்லது நாம் யாராக இருக்க முடியும் என்பதை அது உணர்த்துகிறது. பணிவு என்பது நம் வாழ்க்கையைப்பற்றிய நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பது. இன்றைய நற்செய்தியில் இயேசு கற்றுத்தரும் உன்னதமான பாடம், நாம் உயர்த்தப்படவே அவர் விரும்புகிறார், மற்றவர்களால் கவனிக்கப்பட அல்ல. பணிவு என்பது நேர்மை. இந்த நேர்மை நமது மாணவர்களை ஈர்க்கிறது, நம்மைப் பின்பற்ற மற்றவர்களை அழைக்கிறது. "அன்னை மரியாளின் பணிவைப் போற்றுங்கள் ஏனென்றால் அவர் நற்செய்தியில் சாதாரணப் பெண்ணாகத் தோற்றமளித்தாலும் அவள் ஒரு கன்னியாகவும் இறைவனின் தாயாகவும் உள்ள மகத்துவத்தை உள்ளடக்கி மிகவும் உயர்ந்தவளாயிருக்கிறாள்" (தி.நூ. 104:1) என புனித தெலசால் அன்னை மரியாளை நமக்கு முன்னுதாரணமாகத் தருகிறாள்.

ஜெபம் : என் இயேசுவே, பதவியும், வாய்ப்பும், வழியும் எனக்குத் தரப்படும்போது நான் பணிவுடனும் ஆடம்பரமின்றி அவற்றை செய்யவும் செயல்படுத்தவும் உமது கருவியாக அழைக்கப்பட்டிருக்கிறேன்ன என்பதை நான் உணரச் செய்தருளும், ஆமென்.

### தெலசாலின் பொன்மொழி

இதயங்களை தொடுவதற்கான அருளை கடவுளிடம் அடிக்கடி வேண்டுங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எரே 18:18-20

பதிலுரைப்பாடல்
திபா. 31:4-5,13,14-15

நற்செய்தி
மத்தேயு 20:17-28

புனித ஹர்பர்ட்

இயேசுவின் நெருங்கிய நட்பில் உள்ள மூன்று திருத்தூதர்களில் யாக்கோபுவும் யோவானும் உண்டு என்பதை நாம் அறிவோம். இவர்கள் இருவரும் கூட இயேசுவின் போதனையை தவறாகப் புரிந்துகொண்டு அவரின் ஆட்சிப்பீடத்தில் உயர்ந்த பதவிகளைப்பெற விரும்புகின்றனர். நாமும் அதிகாரம் மற்றும் கௌரவம் மீதும் மிகவும் ஈர்க்கப்படுவதில் ஆச்சரியமில்லை. திருச்சபையும் மற்றும் துறவுற வாழ்க்கையிலும் கூட அதிகாரப்போராட்டங்களில் இருந்து விடுபடவில்லை என்றே தோன்றுகிறது. நற்செய்தியின் தீவிரமான, பணிவாழ்வின் ஆழமான புரிதலை, நாம் இறைவனிடம் மன்றாட வேண்டும். இன்றைய நற்செய்தியில் இயேசு பணிவான தியாகம் நிறைந்த பணிவாழ்விற்கு நம்மை அழைக்கின்றார். "உங்கள் வாழவில் இறைவனுக்காக தான் உண்மை, இதன் வழியாக நீங்களும் நிறைவடைந்து உங்கள் மாணவர்களின் ஆன்மாவையும் அவரிடம் அழைத்து இதைச்செய்யமுடியும்" (தி.நூ. 70:2) என புனித தெலசால் நமக்கு வழிகாட்டுகிறார்.

ஜெபம் : என் இறைவா, என் அன்றாட செயலிலும் பணிவாழ்வினிலும் வரும் துன்பங்களையும் மற்றும் அவமானங்களையும் தியாக உணர்வுடன் ஏற்றுக்கொள்ளும் வரம் தாரும் ஆமென்.



மார்ச் 2022

# 16

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்ணான்டோ FSC

**தெலசாலின் பொன்மொழி**

ஒளிரும் விசுவாசத்துடன் வாழுங்கள். நீங்கள் கடவுளின் பிரசன்னத்தில் இருக்கிறீர்கள். அதுவே உங்களுக்கு போதுமானது. (கடிதம் – 111)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எரே 17:5-10

பதிலுரைப்பாடல்
திபா.1:1-2, 3-4, 6

நற்செய்தி
லூக் 16:19-31

புனித பேட்ரிக்

மார்ச் 2022

**17**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

இன்றைய நற்செய்தி, முதலாவதாக ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் உள்ள இடைவெளியைச் சுட்டிக்காட்டுகிறது. ஏற்றத்தாழ்வு நிறைந்த சமூகம். அத்தகைய நிலைமையை இன்றும் நாம் காண்கின்றோம். இரண்டாவதாக ஏழைக்கு இயேசு 'இலாசர்' என்று பெயர் சூட்டுகிறார், இயேசுவின் உவமைகளில் இந்த உவமையில் வரும் பாத்திரத்திற்கு மட்டுமே இயேசு பெயர் சூட்டியிருக்கிறார். இது இயேசு ஏழையின் மீது கொண்டுள்ள தனிப்பட்ட உற்றுநோக்கலைச் சுட்டிக்காட்டுகிறது. மூன்றாவதாக இவ்வுலகிலும் மறு உலகிலும் இலாசரின் தோழமை, அதாவது இவ்வுலகில் நாமும் மறு உலகில் ஆபிரகாமும் தூதர்களும். எத்தகைய தோழமைக்காக நாம் வாழ்கிறோம் அல்லது வாழப்போகிறோம் என்பதை நினைவூட்டுகிறது. நான்காவதாக பணமும் வீடும் சுகமும் நிரந்தரமற்றவை என்றும் விண்ணகப் பேரின்பமே நிரந்தரமானது எனச்சுட்டிக்காட்டப்படுகிறது, எத்தகைய பேரின்பத்திற்கு நாம் முன்னுரிமை தருகிறோம். "மூன்றரசர்களைப் பின்பற்றுவர்களாய் ஏழ்மையை விரும்பி, ஏழைக்குழந்தைகளின் கல்விப்பணிக்குப் பொறுப்பாக வேண்டும்" (தி.நூ. 96:3) என தெலசாலும் அழைப்புவிடுகிறார்.

ஜெபம் : அன்பு இயேசுவே, ஏழ்மையை விரும்பவும் ஏழ்மையில் உம்மைக் காணவும் அருள்தாரும். ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

ஒரு முழுமையான மனமாற்றம் என்பது இதயத்திலிருந்து வரவேண்டும், அதுவல்லாதவை பயனற்றது. (MSF)

COMMUNICATION COMMISSION
SECTOR INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தொ.நூ. 37:3-4, 12-13, 17-28

பதிலுரைப்பாடல்
திபா. 105:16-17, 18-19, 20-21

நற்செய்தி
மத்தேயு 2133-43, 45-46

எருசலேம் நகர் புனித சிரில்

மார்ச் 2022

**18**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜான் பெர்னான்டோ** FSC

சிலுவையில் உயிர்விட்ட இயேசு அனுபவித்த நிராகரிப்பு அவருக்கு உண்மையான ஆழ்ந்த வலியையும் துன்பத்தையும் நிச்சயமாக அளித்திருக்கும். அவருடைய இதயத்தில் அடைந்த வலிதான் மிகப்பெரிய வலி, பெரிய துன்பம் என்பதனை நாம் அறிகிறோம். அந்த துன்பம் பலவீனத்தின் செயல் அல்ல மாறாக அன்பின் செயல். இந்த அன்பின் இழப்பு என்பது ஆழமான அனுபவம், புனிதமானது, மேலும் நமக்காக சுடர்விட்டு எரியும் அன்பின் விளைவாகும். இதன் விளைவுதான் இயேசு சிலுவையில் தொங்கும்போது 'தந்தையே இவர்களை மன்னியும்' என்றார். இந்த அன்பின் செயலை இன்று பின்பற்றும் போது நாமும் இயேசுவைப்போல இரக்கத்தின் மூலைக்கல்லாவோம், "இயேசு தம் திருச்சபையை அன்பு செய்ததுபோல நாமும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை அன்பு செய்கிறோம் என்பதற்கான திடமான ஆதாரத்தை நாம் தரவேண்டும். அதற்காக மிளிரும் ஆர்வத்தால் நாம் செயல்படுத்துவோம்," (தி.நூ. 201:2).

ஜெபம் : என் இறைவா, ஒளிரும் நம்பிக்கையையும் மிளிரும் ஆர்வத்தையும் என்னில் நாளும் வளர்த்தருளும் ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

புனித வளனார் (குழந்தை இயேசுவின் நலனுக்காக எவ்வாறு சிறப்பான அக்கறை செலுத்தினாரோ, அதை போன்ற அக்கறையை கடவுள் உங்களிடம் ஒப்படைத்துள்ள குழந்தைகளிடம் செலுத்த நீங்கள் அறிவுறுத்தப்படுகிறீர்கள்). (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இன்று நாம் புனித கன்னிமரியின் கணவரான யோசேப்புவின் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். புனித கன்னிமரியாள் இல்லையென்றால் நாம் இந்த 'அமைதியான மனிதனை' நாம் அறிந்திருக்கமாட்டோம், இவர் அன்னை மரியாளின் 'ஆம்' அப்படியே என்ற ஒப்புதலில் இவரும் பங்குகொள்கிறார். எனவே, இவர் இறைவனின் திட்டத்தைச் செயல்படுத்துவதில் சிறந்த எடுத்துக்காட்டு. இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய இவர் இறைவனின் குரலுக்கு செவிகொடுப்பதில் சிறந்தவர். கவனச் சிதறல்கள் அதிகமாகவுள்ள உலகில் வாழும் நாம் இந்த அமைதியான மனிதனைப் பின்பற்றுவோம். இவர் உழைப்பில் இயேசுவுடனிருந்தால் இறைஉடனிருப்பை அனுபவித்தார். வாழ்வில் அங்கீகாரத்தையோ அல்லது கௌரவத்தையோ நாடாத பணிவுள்ள மனிதர், சாதாரண வாழ்க்கையின் கண்ணியத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு. '"புனித யோசேப்பிடம் ஒப்படைக்கப்பட்ட பணியைப்போலவே உங்களிடமும் ஒரு புனிதப் பணித் தரப்பட்டுள்ளது. அதனை நிறைவேற்ற இறை உடனிருப்பும், விழுமியங்களும் சாதாரணமாகக் காணப்படுவதைக் காட்டிலும் அதிகமாகத் தேவைப்படுகிறது" (தி.நூ. 110:1) என் நம் தந்தை தெலசால் நினைவுப்படுத்துகிறார்.

ஜெபம் : அன்புத்தந்தையே இறைவா, என் பணிவாழ்வில் இறைவனின் உடனிருப்பை அனுபவிக்கும் வரம் தாரும் ஆமென்.

முதல் வாசகம்
2 சாமு 7:4-5, 12-14, 16

பதிலுரைப்பாடல்
திபா. 89:1-2, 3-4, 26,28

நற்செய்தி
உரோ 4:13, 16-18, 22

புனித யோசேப்பு
புனித கன்னி மரியாவின் கணவர்

மார்ச் 2022
**19**
சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் திருப்பலியில் பங்கேற்கும் போது, நீங்கள் கல்வாரியில் கடந்தவற்றை உணர்கிறீர்களா, ஏனெனில் அங்கே முழுமனித இனத்திற்கு தன் உயிரை பலியாக தந்த இயேசு, நமக்காக தனிப்பட்ட முறையில் எதையும் செய்ய தயாராக உள்ளார் என்பதை உணர்கிறீர்களா? (Regarding Holy Mass)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
வி.ப. 3:1-8, 13-15

இரண்டாம் வாசகம்
1 கொரி 10:1-6, 10-12

நற்செய்தி
லூக்கா 13:1-9

தவக்காலம்
3-ம்
ஞாயிறு

மார்ச் 2022

**20**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

நம் வாழ்க்கை நற்பலனைத் தரவில்லை என்றால் நாமும் 'வெட்கப்படுகிவோம்' என்ற செய்தி தரப்படுகிறது நல்ல பழக்கங்களைத் தருவது ஒரு விருப்பமல்ல மாறாக அது 'தேவை'. இது நமது ஆன்மீக ஆரோக்கியத்தின் தெளிவான அறிகுறி அல்லது அடையாளம். நம் வாழ்வில் நல்ல பலனைத்தரவேண்டியது நமது 'தீவிரக் கடமை' என்பதை நாம் அறிய வேண்டும் உவமையில் கொடுக்கப்பட்டுள்ள காலம் 'இரக்கத்தின் காலம் ', தந்தை அன்பினால் கடமைப்பட்டு அந்த வாய்ப்பை நமக்கத் தருகிறார், இறைஇரக்கத்திற்குக் கட்டுப்பட்டு நாம், நம் ஒத்துழைப்பைத்தர வேண்டும். "இதயத்தின் மாற்றமே" மிகவும் முக்கியமான மாற்றம், அது இல்லாத மற்றம் என்பது மலட்டுத்தன்மை கொண்டது என்பதை நாம் நம்புவோம்" (தி.நூ. 175:2) என புனித தெலசால் தெளிவுப்படுத்துகிறார்.

ஜெபம் : அனைத்தையும் படைத்து ஆண்டு நடத்தும் இறைவா, உண்மையான இதய மாற்றத்தைப் பெற எனக்குத் தேவையான அருளைத்தாரும் ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

புனித வளனார் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதற்காக கொண்டிருந்த உறுதியான மனதை பெற்றுள்ளீர்களா? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
2 அர 5:1-15

பதிலுரைப்பாடல்
திபா. 42:1,2, 43:3-4

நற்செய்தி
லூக் 4:24-30

புனித நிக்கோலஸ்
டிஃளூ

மார்ச் 2022

**21**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

## சிந்தனைத் துளிகள்

இயேசுவின் போதனையில் அவர் ஊரின் மக்கள் மலைத்துப் போனினர். அவர் நாசரேத்தில் பிறந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக அவரை ஏற்றுக்கொள்ள தயங்குகின்றனர். தேந்து கொள்ளப்பட்டவரை நிராகரிக்கின்றனர். இயேசு அவர்களைக் கண்டித்து நினைவூட்டுகிறார். ஆனால் அவரைத் தாக்கவும் தயங்கவில்லை. தமது அளவுகோலின்படியே அனைத்தும் நிகழ வேண்டும் என்பது இறைவனின் திட்டம். இயேசுவின் விழுமியங்கள் தாழ்ச்சியுள்ளதாகவும் எளிமையானதாகவும் இருந்தன. "தொண்டு ஏற்பதற்கல்ல தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும்" (மாற்கு 10:45). தேர்ந்து கொண்டவர்களை இறைவன் இறுதிவரைக் காக்கின்றார். தாம் தேர்ந்துகொண்டவர்களைத் தயார் செய்கிறார். தாம் தேர்ந்து கொண்டவரை முழுமையாக அறிந்தவராக இருக்கின்றார். "நீங்கள் எந்த அளவிற்குப் பணிவுள்ளவர்களாய் இருக்கிறீர்களோ அந்த அளவிற்கு இறையருளைப் பெறுவீர்கள்". (தி.நூ.142:2)

ஜெபம் : என் இறைவா, என் பணிவாழ்விலும் தாழ்ச்சியுடனும் பொறுமையுடனும், இருக்க அருள்தாரும் ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

எப்பொழுதும் கடவுள் உங்களை கைவிட்டுவிட்டார் என்று உங்கள் மனதை இணங்க வைக்கிறீர்கள். மாறாக, எப்போதையும் விட உங்களை தன் கரங்களில் தாங்க தயாராக உள்ளார் என்பதில் உறுதியாக இருங்கள். (கடிதம் - 108)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

"மனமார" (மத், 18,35) என்ற இயேசுவின் சொற்களை நாம் உற்றுநோக்கும் போது உண்மையான மன்னிப்பு என்பது சுதந்திரமாக, விருப்பத்தோடு தருவதாக இருக்க வேண்டும். அதாவது நமக்கெதிராக குற்றம் செய்பவர்கள் மீது வன்மத்தோடு இல்லாமல் இருப்பது, நமது வெறுப்பையும், கசப்பையும் புறந்தள்ளுவது, பழிவாங்கும் எண்ணத்தை முற்றிலும் கைவிடுவது போன்றவையாக இருக்கவேண்டும். இதற்கு எரேமியா நூலில் சொல்லியிருப்பது போன்று "அவர்களுடைய பாவங்களை நினைவு கூறமாட்டேன்" (எரே 31,34) என்ற இறையனுபவத்தை நாம் பெறவேண்டும். இதயத்திலிருந்து மன்னிப்பு அருள்பவர்கள் இறைவனை மாட்சிப்படுத்துகின்றனர். இந்த மன்னிப்பின் அனுபவத்தை நம் மாணவர்களும் பெற்றுக்கொள்ளும் வகையில் "அவர்கள் ஒருவருக்கொருவர் மென்மையாகவும் மற்றும் பரஸ்பரம் மன்னிப்பவர்காளகவும் இருக்கவும் நீக்ஙள் உதவவேண்டும்"(தி.நூ. 198,3)

ஜெபம் : என் வாழ்வில் நான் இரக்கத்தைப் பெறுவதைப் போல நானும் மற்றவர்களுக்கு இரக்கம் காட்ட அருள்தாரும் ஆமென்.

முதல் வாசகம்
தானி (இ) 1:2, 11-19

பதிலுரைப்பாடல்
திபா. 25:4-5, 6-7, 8-9

நற்செய்தி
மத்தேயு 18:21-35

இயேசுவின் இதயத்தின் புனித மரியா ஜோசஃபா

மார்ச் 2022

**22**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC



### தெலசாலின் பொன்மொழி

வகுப்பறையில் நீங்கள் உங்கள் பொறுமையை இழந்து விடாதீர்கள், அமைதியையும், ஒழுக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான வழி அது அல்லடா (கடிதம் - 60)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
இச 4:1, 5-9

பதிலுரைப்பாடல்
திபா. 147:12-13, 15-16, 19

நற்செய்தி
மத்தேயு 5:17-19

புனித
மாங்க்ரோவேகோ
துரீபியுஸ்: ஆயர்

மார்ச் 2022

**23**

புதன்கிழமை

‘அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்’ என்பது நாம் அடிக்கடி பயன்படுத்தும் முதுமொழி. எங்கும் அவசரம் எதிலும் அவசரம் என்று பழகிப்போன நமது இன்றைய சமூகம், எல்லாவற்றிலும் உடனடித் தீர்வை எதிர்நோக்குகிறது. இவையனைத்தும் பொறுமை இழந்த சமூகமாக நமக்கு எடுத்துக்காட்டுகிறது. ஆனால் இறைவன் சிறிது சிறிதாக தனது திட்டத்தை ஒன்றன் பின் ஒன்றாக, முழுமையாக, நிலையானதாக நிறைவேற்றி வருகிறார். இறைவனின் திட்டம் மனித ஞானத்தைவிட மாறுபட்டது என்பது நமது அனுபவம் உணர்த்தும் உண்மை. நாம் பொறுமையுடன் இறைத்திட்டத்திற்கு மனந்திறந்தவர்களாய், அதற்கு முழுமையாக சரணாகதியடைந்தவர்களாக வாழவேண்டும் என இன்றைய வாசகம் நம்மை அழைக்கிறது. "உமது திருவுளம் நிறைவேறுக" என்ற மனநிலையோடு வாழ்ந்து இறைவனின் பராமரிப்பின் மீது நம்பிக்கைக் கொண்டு வாழ்வோம். "கிறித்தவப் பள்ளிகளை நிறுவுவதற்காக என்னை கண்ணுக்குப் புலப்படாத வழியிலும் நீண்ட காலமுமாக வழிநடத்தினார். ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு நான் எதிர்பார்க்காத வகையில் வழிவகுத்து என்னை நடத்தினார்", என்று தனது இறையனுபவத்தை தெலசால் நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

ஜெபம் : இறைவா, உமது இறைத்திட்டத்தை என் வாழ்வில் நிறைவேற்ற உம்மை நான் அனுமதிக்க என் மனதைத் தயார்படுத்தும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

உங்கள் கடமைகளையும், ஆன்மீக பயிற்சிகளையும் சிறப்பாக செய்ய முயற்சி செய்யுங்கள். இவை உங்களை புனிதமடைய செய்து கடவுளிடம் கொண்டு செல்லும் (கடிதம் - 60)

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

"என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார் என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறடிக்கிறார்", இயேசுவைப்பற்றி நடுநிலையாக இருக்க வழியில்லை. அவரைப் பின்தொடர்ந்து அவருக்கு உதவி செய்யத் தீர்மானிக்க நமக்கு அழைப்புத் தரப்படுகிறது. அவரைப் புறக்கணிப்பது, அவரைப்பற்றிய முடிவைத் தள்ளிப்போடுவது அல்லது அவரை ஒரு மதவாதியாகப் பார்ப்பது அல்ல மாறாக அவருக்கு உதவவும், பணியாற்றவும் அவரின் கருவியாகவும் நாம் நம்மை அனுமதிக்க வேண்டும். அப்போது "யாரெல்லாம் இறைவனோடு இறைவனில் வாழ்கிறார்களோ அவர்களைத் தம் தூய ஆவியாரால் வழிநடத்துகிறார்" (திநூ. 48,1) என தெலசால் உறுதியளிக்கிறார்.

ஜெபம் : இறைவா, உமது கருவியாக உமது மீட்புப் பணியில் நான் செயல்படும் அருளை எனக்குத் தாரும் ஆமென்.

முதல் வாசகம்
எரே 7:23-28

பதிலுரைப்பாடல்
திபா. 95:1-2, 6-7a, 7b-9

நற்செய்தி
லூக் 11:14-23

ஸ்வீடன் நாட்டு
புனித கத்ரீன்

மார்ச் 2022

**24**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

### தெலசாலின் பொன்மொழி

உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியானது, திருச்சபைக்கு மிகவும் முக்கியமான மற்றும் தேவையான பணி ஆகும்.



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசா 7:10-14, 8:10

பதிலுரைப்பாடல்
எபி 10:4-10

நற்செய்தி
லூக் 1:26-38

ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு

மார்ச் 2022

**25**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

கன்னியின் வயிற்றில் இறைமகன் நம் மனித இயல்பை எடுத்துக் கொண்டதைக் கொண்டாடும் நாள். இறைவன் நம்மை மிகவும் அன்பு செய்கிறார் என்ற ஆழமான உண்மையை நாம் நினைவுகூர்ந்து நன்றியோடு கொண்டாடும் நாள். இறைவனும், மனிதனும் ஒன்றுபட்ட நாள். இறைவனின் திருவுளத்திற்கு முழுமையாக அன்னை மரியாள் அடிபணிந்து மாட்சிமைமிகு செயலைச் செய்த நன்னாள். அன்னை மரியாள் இச்செயலுக்காக "ஆம், அப்படியே ஆகட்டும்" என்று சொன்ன நாள். இதன் வழியாக தன் வாழ்நாள் முழுவதும் 'ஆம்' என்று சொன்னதால் இயேசுவை கருவில் பெற்று அவரை மையப்படுதிய வாழ்க்கையை தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தாள், இத்தகைய மகத்துவங்களைக் கொண்ட நாளில் நாம் இறைவனுக்கு நன்றி கூறி அவரைப் போற்றிப் புகழ்ந்து, அந்த அன்னையைப் போல இயேசவை மையப்படுத்திய வாழ்வு வாழ்வோம். அது தான் நமது லசாலிய ஆன்மீகம். புனித தெலசாலின் 'கிறித்துப் பிறப்பின் அறிவிப்பு' (தி.நூ.112) என்ற தியானத்திலிருந்து லசாலிய ஆன்மீகத்தை அதிகமாக அறிந்து கொள்ளலாம்.

ஜெபம் : மனித உரு எடுத்த இயேசுவே, உம்மை மையப்படுத்தி வாழும் லசாலிய ஆன்மீகத்தை என்னில் வளர்த்தருளும் ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

மரியாள் இயேசுவின் தாயாக அறிவிக்கப்பட்டபோது, தன்னை ஒரு கடவுளின் அடிமை எனக்கூறி தன்னை தாழ்த்திக்கொண்டதுபோல, நாம் கடவுளின் அருளால் பெற்றுள்ளதை கொண்டு எவ்வாறு வாழ்கிறோம் என சிந்திப்போம்? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
ஓசேயா 6:1-6

பதிலுரைப்பாடல்
திபா. 51:1-2, 16-17, 18-19

நற்செய்தி
லூக் 18:9-14

புனித லட்ஜர்

மார்ச் 2022

**26**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்ணான்டோ FSC

இறைவன் முன் தற்பெருமையும் வீண் கௌரவமும் எவ்வளவு அறுவறுக்கத்தக்கது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது இன்றைய நற்செய்தி. பரிசேயரின் தற்பெருமையும் வீண் கௌரவமும் வரி தண்டுவோரின் மனத்தாழ்மையும் ஒப்பிடப்படுகிறது. பரிசேயர் இறைவனிடம் வேண்டும்போது பெருமைப்பட்டுக் கொள்கிறார். வரி தண்டுபவர் இறைவன் முன்பு உண்மையுடனும் நேர்மையுடனும் பணிவுடனும் தன் நிலையை எடுத்துக்கூறி, இறைவனின் இரக்கத்தை வென்றவராக வீடு திரும்பியதை இயேசு நமக்குச் சுட்டிக்காட்டுகிறார். சில நேரங்களில் நாமும், நமது குற்றங்களையும், குறைகளையும் நியாயப்படுத்தி நம்மைச் சுற்றி தற்காப்பு வலையை அமைத்துக் கொள்கிறோம். இறைவனின் இரக்கத்தைப் பெற நாம் அவரது இரக்கத்தை அங்கீகரிக்கும் போது அவரின் இரக்கத்தைப் பெறத் தகுதி பெறுகிறோம். அதோடு பரிசேயரின் தவறினையும், நடிப்பினையும் பொய்யான பக்தியையும் குறித்து சுட்டிக்காட்ட இயேசு தவறில்லை. "உங்கள் மாணவர்கள் தவறு செய்யும் போது அவர்களைக் கண்டித்துத் திருத்த வேண்டும். அவர்கள் தொடர்ந்து அத்தவறுகளைச் செய்யாமல் இருக்க அவர்களை சிந்திக்கவும் தங்களையேத் தொடர்ந்து கண்காணிக்கவும் வாய்ப்புத்தர வேண்டும்" (திநூ. 203,1). "இதனைச் செய்ய அவர்களோடு உங்கள் உறவில் மென்மை (Gentleness) மற்றும் பொறுமை (Patience) ஆகிய குணங்களைக் கொண்டிருக்க வேண்டம், மேலும் விவேகத்துடன் (Prudence) செயல்பட வேண்டும்" (தி.நூ. 203,2).

ஜெபம் : கருணை நிறைந்த இறைவா, உமது கருணையை என் பணி வாழ்வில் மாணவர்களைத் திருத்தும்போது நான் அனுபவிக்கவும், அவர்களைத் திருத்தும்போது நான் மென்மையுடனும் பொறுமையுடனும் இருந்து முன்மதியுடன் செயல்பட அருள்தாரும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, கடவுள் உங்களில் தொடங்கியிருப்பதை தொடர்ந்து நடத்த அவரிடம் உங்களுக்காக வேண்டுகிறேன். (கடிதம் - 46)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
யோசுவா 5:9, 10-12

இரண்டாம் வாசகம்
2 கொரி 5:17-21

நற்செய்தி
லூக் 15:1-3, 11-32

தவக்காலம்
4-ம்
ஞாயிறு

மார்ச் 2022

**27**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

## சிந்தனைத் துளிகள்

காணமற்போன மகனின் கதை நாம் அனைவரும் நன்கறிந்தது. தன் சொத்து முழுவதையும் எடுத்துக்கொண்டு தந்தையை விட்டு வெளியேறி தனது பாவ வாழ்க்கைக்காக, சொத்தை செலவிட்டு வறுமையாகி தனிமையில் இருக்கும்போது தன் இயலுணர்வுக்கு வருகிறான். பாவத்தின் பலனால் அவன் ஆதரவற்ற மேலும் தனிமைக்கும் தள்ளப்படுகிறான். இந்த மகனிடமிருந்து நாம் பெறக்கூடிய உட்பார்வை என்பது அவன் ‘திரும்பினான்’, குறிப்பாக தன் இயலுணர்வுக்கு. அந்த இயலுணர்வின் போது ஏழ்மையான, வெறுமையான வாழ்க்கை வாழ்வதைவிட தான் ‘மதிப்புமிக்கவர்’ என்பதை உணர்ந்தார். தனது தந்தையிடம் தான் திரும்பிச் செல்லமுடியும் என எண்ணினான். தனது தந்தையின் நிபந்தனையற்ற அன்புதான் இதற்குக் காரணம். இந்த விழிப்புணர்வுதான் அவனது மனதைத் தொட்டு திரும்புவதற்கான நம்பிக்கையை அறித்தது. "இத்தகைய இதயங்களைத் தொடுவதற்கான பணியைத்தான் நீங்கள் செய்கிறீர்கள். திருத்தூதர்களுக்கு அவர் கொடுத்த அந்த இதயத்தைத் தொடும் அருளை இறைவன் தர அவரிடம் மன்றாடுங்கள்" (திநூ. 129:2), என்று புனித தெலசால் அறிவுறுத்துகிறார்.

ஜெபம் : அன்பு இறைவா, மாணவர்களிடையே விழிப்புணர்வினால் இதயங்களைத் தொடவும், அவர்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தவும், என்னை உமது கருவியாக்கும். ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

இறைமகன் இயேசு கிறிஸ்துவை போல உங்களது இலக்கு தெளிவாக இருக்கட்டும். அப்போதுதான் அவரின் அருளையும், அக்கறையையும் நீங்களும், உங்கள் பணியாளர்களும் பெறுவீர்கள். (MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசா 65:17-21

பதிலுரைப்பாடல்
திபா. 30:1-5, 10-12

நற்செய்தி
யோவா4:43-54

புனித
மூன்றாம் சிக்துஸ்

மார்ச் 2022
**28**
திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

மகன் பிழைத்துக் கொண்டான் மேலும் அரசு அலுவலர் வீட்டிற்குச் செல்லும் வழியிலேயே அவன் குணமானதைக் கேட்டு மகிழ்கிறார். 'அவன் குணமடைவான்' என்று இயேசு கூறிய அதே நேரத்தில் தான் அவன் குணமடைந்திருக்கிறான் என்பதை அவர் நினைவு கூர்ந்தார். அவரும் அவர் வீட்டார் அனைவரும் இயேசுவை நம்பினர்.

இயேசுவின் வார்த்தைகளில் மாறுபாடு நமக்குப் புலப்படுகிறது. முதலில் 'நீங்கள் அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் கண்டாலன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள்' என்று இயேசு சொல்லும்போது கோபமாக இருப்பது போல் தெரிகிறது. இது சொல்லிமுடித்த உடனே "உன் மகன் பிழைப்பான்" என்று சொல்லி சிறுவனைக் குணப்படுத்துகிறார். இயேசுவின் வார்த்தைகளிலும், செயலிலும் ஏன் இந்த வேறுபாடு என நமக்குத் தோன்றுகிறது.

வின் வார்த்தைகளில் மாறுபாடு நமக்குப் புலப்படுகிறது. முதலில் 'நீங்கள் அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் கண்டாலன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள்' என்று இயேசு சொல்லும்போது கோபமாக இருப்பது போல் தெரிகிறது. இது சொல்லிமுடித்த உடனே "உன் மகன் பிழைப்பான்" என்று சொல்லி சிறுவனைக் குணப்படுத்துகிறார். இயேசுவின் வார்த்தைகளிலும், செயலிலும் ஏன் இந்த வேறுபாடு என நமக்குத் தோன்றுகிறது.

நம்மில் பலர் நம்பிக்கையில் பலவீனமாக இருக்கிறார்கள் என்ற உண்மையை அவர் அறிந்திருந்தார். சில நேரங்களில் "அடையாளங்களும் அருஞ்செயல்களும்" மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதையும் அறிந்திருந்தார். மக்களின் நம்பிக்கையை வளர்த்தெடுப்பதுதான் அவரது இலக்காக இருந்திருக்கிறது. நம்முடைய வாழ்வில் நாம் அனுபவிக்கும்அடையாளங்களோ அல்லது அருஞ்செயல்களோ அல்லது சோதனைகளோ எதுவாக இருந்தாலும் அதன்வழியாக இறைவன் செயலாற்றுகிறார் என்ற ஆழமான நம்பிக்கையை வளர்த்தெடுப்பதே நமது இலக்காக இருக்க வேண்டும். "உங்கள் நம்பிக்கை எல்லாவற்றிலும் உங்களை வழிநடத்தும் ஒளியாகவும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை வான்வீட்டிற்கு அழைத்துச் செல்லும் கலங்கரை விளக்காகவும் இருக்கவேண்டும்" (திநூ. 178:1) என்று நமது பணிவாழ்வில் "நம்பிக்கை" இன்றியமையாதது என புனித தெலசால் வலியுறுத்துகிறார்

ஜெபம் : என் இறைவா, என் நம்பிக்கைகளை என்னில் வளர்த்தருளும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

கடவுள் உங்களை இந்த பணிக்காக அழைத்துள்ளார். அவரின் அருளின் வழியாக உங்கள் குழந்தைகளை விவேகத்துடனும், அக்கறையுடனும் வழிநடத்துங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
SECTOR INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசே 47:1-9,12

பதிலுரைப்பாடல்
திபா. 46:1-2, 4-5, 7-8

நற்செய்தி
யோவா 5:1-3, 5-16

புனித ஜோனஸ்,
பராசியஸ்
துறவியர்கள் - மறைசாட்சியர்கள்

மார்ச் 2022

**29**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்னான்டோ FSC

"முடக்குவாதம்" என்ற குறியீட்டின் பொருளை நாம் உற்றுநோக்குவோம். அவன் நடக்கவும் தன்னைத்தானே கவனித்துக்கொள்ளவும் முடியவில்லை. குளத்தின் அருகிலேயே 38 ஆண்டுகள் கவனிக்கப்படாமலும் இரக்கம் காட்டப்படாமலும் இருப்பதைக் கண்ட இயேசு அவரைப் பார்த்து தனது முழு கவனத்தையும் செலுத்துகிறார். சிறிய உரையாடலுக்குப்பிறகு அவனைக் குணப்படுத்தி எழுந்து நடக்கச் சொன்னார். அந்த முடக்குவாதமுடையவர் தனது இயாலமையையும் நிலையையும் இயேசுவிடம் ஒப்புக்கொள்கிறான். சுதந்திரமில்லாமலும் சக்தியற்றவனாகவும் இருப்பதை அறிக்கையிடுகிறான். நாம் எந்த நிலையில் இருந்தாலும் இறைவன் நம்மைப் பார்க்கிறார் என்பதைத்தான் இந்த குறியீடுகள் நமக்குச் சொல்கின்றன, எழுந்து நடக்க அழைக்கிறார். அவரின் கருணையும், கவனமும் நம்மை நோக்கியதாக இருக்கிறது. நாம் அவரை குணப்படுத்த அனுமதிக்க வேண்டம். அவர் கூறும் விடுதலையின் வார்த்தைகளைக் கேட்க வேண்டும், நமது பணிவாழ்வில் கவனிக்கப்படாமலும் இரக்கம் காட்டப்படாமலும் இருக்கும் மாணவர்களைக் குணப்படுத்தவும் விடுதலை அடையவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அவர்களின் "வழிகாட்டுதலுக்குத் தேவையானதைக் கண்டறியவும் ஆய்ந்து தெளியும் ஆவியை இறைவனிடம் நாம் கேட்க வேண்டும். நம்முடைய பராமரிப்பில் உள்ளவர்களை வழிநடத்த அது மிகவும் நமக்குத் தேவை" (திநூ. 33,1)

ஜெபம் : என் இறைவா, ஆய்ந்து தெளியும் ஆவியானவரை என் பணிவாழ்வில் எனக்குத் துணையாக அனுப்பியருளும். ஆமென்.

### தெலசாலின் பொன்மொழி

உங்களின் எதிர்காலத்தை பற்றிய கவலைகளையும், பதட்டங்களையும் கடவுளின் கரங்களில் ஒப்படைத்து விடுங்கள். அவர் உங்களை கவனித்து கொள்வார்.

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசா 49:8-15

பதிலுரைப்பாடல்
திபா. 145:8-9, 13cd-14, 17-18

நற்செய்தி
யோவா 5:17-30

புனித யோவான் கமிலஸ்

மார்ச் 2022

**30**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜான் பெர்னான்டோ** FSC

இன்றைய நற்செய்தி வாசகம் இறைமகன் இயேசுவின் முழு வாழ்க்கையும் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக உள்ளதைக் காண்கிறோம். மேலும் தந்தை மகனின் உறவைப் பற்றி நமக்கு அதிகம் வெளிப்படுகிறது. தந்தையும் மகனும் எந்தவித வேறுபாடின்றி ஒரே ஞானமும், ஒரே திருவுளமும், ஒரே வல்லமையும் ஒரே கடவுள் தன்மையும் கொண்டவர்களாக நிறைவான இணக்கத்துடன் இருப்பதன் வழியாக அவர்களின் ஒற்றுமையை நாம் உணர முடிகிறது. தந்தை மகன் ஒற்றுமையைப் பற்றிய புரிதலினால் நாம் அவருடன் ஒன்றிக்க முனைகிறோம். இதனால் நாம் அவருடைய செயலிலும் ஒன்றிவிடுகிறோம். இந்த ஒற்றுமைதான் நமக்கு நிறைவைத் தருகிறது. மூவொரு இறைவனின் மறைபொருள் நம் பணிக்கும் வாழ்வுக்கும் அடிப்படை. புனித தெலசாலைப் பொறுத்தவரை "உறுதியான ஒன்றுபட்ட சமூகம் என்பது மூவொரு இறைவனின் அன்பின் மறைபொருளின் உருவமாகும் மேலும் அதன் ஒற்றுமையில் பங்கேற்கிறது. அந்த மூவொரு இறைவனின் ஒன்றியமே நமது கல்விப் பணியின் ஆழமும் அனுபவமுமாகவும் இருக்க வேண்டும்" (திநூ. 39,3).

ஜெபம் : மூவொரு இறைவா, உமது மாட்சிமிகு ஒற்றுமையில் நானும் பங்குபெற அருள்தாரும். ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

உங்களை தினமும் தனது பல்வேறுவகையான நிகழ்வுகளில் கடவுள் பங்கேற்க செய்வதற்காக அவரை போற்றிப் புகழுங்கள். (கடிதம் - 110)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
விப 32:7-14

பதிலுரைப்பாடல்
திபா. 106:19 - 20, 21-22, 23

நற்செய்தி
யோவா 5:31-47

முரானோ நகர்
புனித
டானியேல்

மார்ச் 2022

**31**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜான் பெர்ணான்டோ FSC

இறை தந்தை கொடுத்த பணிகள் அனைத்திற்கும் இயேசுவின் செயல்களே சான்றாக அமைந்தன. இதைப்புரிந்து கொள்வதன் வழியே நமது பணிவாழ்வை முழுமையாக நாம் தழுவ முடியும். அவையனைத்துமே அவர் தந்தையுடன் கொண்ட உறவை வெளிப்படுத்துகிறது. இயேசுவின் செயல்கள் அனைத்துமே அவரது தாழ்மையான மற்றும் உண்மையான அன்பினால் ஆனதாகும். அவையே அவர் உண்மையானவர், நேர்மையானவர் மேலும் தூய உள்ளம் கொண்டவராக நமக்கு உணர்த்துகிறது. அவரது 'அன்பு', 'அக்கறை' மற்றும் 'போதனை' அதற்கு சான்றாக அமைந்தன. நமது பணிவாழ்வில் இதனை நாம் பிரதிபலித்தால் இயேசுவின் மீட்புப் பணியில் நாமும் இணைகிறோம். "உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கு நாமும் இணைகிறோம். உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கு நீங்கள் செய்யும் பணியை அன்புடனும், உண்மையுடனும், மிளிரும் ஆர்வத்துடன் நிறைவேற்றுங்கள். அதில் நீங்கள் அனுபவிக்கும் துன்பங்களை மிகப் பொறுமையுடன் எதிர்கொள்ளுங்கள். மனிதர்களால் இகழ்ந்து துன்புறுத்தப்படவும் தயாராக இருக்கவேண்டும். ஊழியத்தில் இயேசுவுக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராக இருங்கள்" (தி.நூ 201,1) என்று இயேசுவுக்கு சான்று பகர புனித தெலசால் அழைப்புவிடுகிறார்.

ஜெபம் : அன்பு இறைவா, என் பணிவாழ்வில் உமக்கு சான்று பகரும் வரம் தாரும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

பிறரின் இதயங்களை நீங்கள் தொட கடவுள் உங்களை எதிர்பார்க்கிறார். (MSF)

# புனித தெலசால் வாழ்க்கைப் பயணத்தில்...

## தெலசாலின் கல்விப்பணி – தொடர்ச்சி...

ஆதிரியன் நியல் என்பவரின் துணையோடு ரீம்ஸ் நகரில் ஒரு பள்ளியை நடத்தத் தொடங்கினார். அதுவே கிறிஸ்தவ சகோதரர்கள் நடத்துகின்ற முதல் பள்ளியாகவும் அமைந்தது. இந்தப் பள்ளியில் பணம் படைத்த செல்வந்தர்களின் குழந்தைகள் இல்லாத, குரு குலக் கல்வி முறை இல்லாத அனைத்து ஏழை மாணவர்கள் மட்டுமே படிக்கும் பள்ளியாக இருந்தது. இங்கு பயிலும் மாணவர்கள் அனைவரும், ஒரே வகுப்பறையில் அமர்ந்து கல்வி கற்கும் சூழலை உருவாக்கி, உலகத்திற்கே முன்னுதாரணமாக ஒரே நேரத்தில் அனைத்து மாணவர்களும் கல்வி கற்கும் திட்டமான **சமநிலையில் கல்விகற்கும் நிலையை** இந்த உலகிற்கு உருவாக்கி வித்திட்டவர் புனித தெலசால் ஆவார்.

இம்மாதிரியான சேவை மனப்பான்மையை நிறைந்த கல்வி கற்ற சூழலைக் கண்ட பல நல்ல உள்ளங்கள் புனித தெலசாலிடம் இன்னும் பல பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென உற்சாகப்படுத்தி பொருளும் ஆதரவும் தந்து, கேட்டுக் கொண்டதற்கிணங்க புனித தெலசால் மேலும் சில பள்ளிகளைத் தொடங்கினார்.

இக்கல்விப் பணியைத் தொடர, சேவை மனப்பான்மை கொண்ட ஆசிரியர்கள் தேவைப்பட்டார்கள். ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது. இப்பணியினைச் செய்து வந்த ஆசிரியர்கள் இந்த ஏழை மாணவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதில் ஏதும் கடினப்படுகின்றார்களா, சிரமப்படுகின்றார்களா, எனக் கண்டறிய நமது புனித தெலசால் அவ்வப்போது பள்ளிகளுக்குச் சென்று மேற்பார்வையிட்டார். அவர்களிடையே இருந்த சில குறைபாடுகளைக் கண்டறிந்த அவர் அவர்களோடு பல ஆலோசனைகளை மேற்கொண்டார். அதனடிப்படையில் தீரவும், தீர்த்து வைக்கவும் வழிகண்டார். ஆதலால் ஆசிரியர்களுக்கு கற்றல் கற்பித்தல் பற்றிய சரியான தீர்க்கமான செயல்பாடுகளைக் கற்றுத்தர விருப்பப்பட்டார்.

இப்பள்ளிகளின் ஆசிரியர்களை 1680 ஏப்ரலில் தனது சொந்த வீட்டிலேயே தங்கவைத்து மாணவர்களுக்கு எப்படிக் கற்றல் கற்பித்தல் நடைபெற வேண்டும் என்பது பற்றிய புரிதலை (அறிவுரைகளை) அவர்களுக்கு உணர்த்தினார். இவ்வாறு ஏழை மாணவர்களுக்கு கல்வி கற்பித்து வந்த ஆசிரியர்களுக்கு மாணவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு எவ்வாறு கற்பிப்பது என்ற புத்தாக்கப் பயிற்சிகளைத் தனது வீட்டிலேயே மேற்கொண்டு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியாக / பள்ளியாக மாற்றி முதன் முதல் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி தொடங்கியவர் என்ற பெயரையும் பெருமையையும் பெற்றார்.

இதற்கிடையே இவர் ஆரம்பித்த பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்கள் அனுபவித்து வந்த இன்னல்களைக் கண்ட அவர் அவர்களைத் தனது வீட்டிலேயே தங்கிப் பணியை மேற்கொள்ளவும் செய்தார். இவர்களே பின்னர் காலங்களில் அருட்சகோதரர்களாக உருவாக்கப்பட்டனர். தனது தனி ஆலோசகக் குருவானவராலும் இறைவல்லமையின் தூண்டலாலும் துறவற சபையைத் தொடங்கி, இவர்கள் அனைவரையும் ஒன்றிணைந்து அருட்சகோதரர்களாக்கி அவர்களுடன் தானும் ஒரு சகோதரரைப் போல் நடந்து வளம் சேர்த்தார்.

(தொடரும்....)

தொகுப்பித்தவர். சகோ. **ஆரோக்கியசாமி** FSC அசாம்


அருட் சகோதரர்கள் பணியாற்றும் நாடுகள்
Canada
United States
Mexico
Guatemala
Costa Rica
Panama
Columbia
Peru
Bolivia
Chile
Brazil
Argentina
Cuba
West Indies
Paraguay
Switzerland
Holland
Belgium
Ireland
Great Britian
France
Spain
Portugal
Italy
Greece
Malta
Niger
Labanon
Israel
Jordan
Pakistan
India
Egypt
Ethopia
Kenya
Srilanka
South Africa
Burma
Thailand
Japan
Hong kong
Philiphines
Vietnam
Singapore
Malaysia
Ivory Coast
Nigeria
Germany
Poland
Austria
Austerlia
Turkey
Czechoslovakis
கத்தோலிக்க ஆசிரியர்களின் பாதுகாவலர்
"புனித தெலசால்"

# ஜெபம்

மிகவும் பரிசுத்தமுள்ள தமத்திருத்துவமே, கிறிஸ்தவப் பள்ளிகளின் சகோரர்களாகிய நாங்கள் எமது பேரவையினை உம்மிடம் ஒப்படைக்கின்றோம்.

தந்தை, மகன், தூய ஆவியே, அருட் சகோதரர்களாகவும், பங்காளராகவும் இருக்கிற எமது வாழ்வில் அனைத்தையும், நீரே வழிநடத்துகிறீர். நன்றி செலுத்துவதில் ஆனந்தத்தையும் மெய்மையில் திட மனதினையும், முடிவெடுப்பதில் பலத்தினையும், எமக்களிக்க உம்மை வேண்டுகிறோம்.

எங்களது பலவீனம் ஒருபுறமிருக்க, வாழ்வினை மாற்றுவதற்கான புதிய வழிகளைப் பின்பற்றுவதற்கு இச் சபையில் எம்மை அர்ப்பணிக்கும் ஆவல் இருப்பதனால் எமது இதயங்களை நம்பிக்கைக்கான காரணங்களோடு நிரப்பப்டுவதாக. உமது அருளோடு, விளிம்பிநிலையினரிடம் செல்லவும், படைப்பாக்கத் திறன்களை வெளியிடவும் நாங்கள் பலத்தையும் துணிவினையும் பெறுவோமாக.

அருட்சகோதரர்களாகவும், பங்காளராகவும் இணைந்து, லசாலியப் பணிக்கு எம்மை அர்ப்பணித்து, உலகத்தின் மீதான உமது பார்வையினை மாற்றவும் எமது பொது இல்லமான பூமியை பராமரிக்கவும், பணிவாழ்வின் உண்மையான சீடர்களாக ஆகவும் நற்செய்தியின் எழுச்சியில் நாங்கள் பணியாற்றுவோமாக.

எமது நட்சத்திர அன்னையிடமும், புனித தெலசால் திருமுழுக்கு அருளப்பரிடமும் லசாலிய அனைத்து புனிதர்களிடமும், தூய அருட்சகோதரர்களிடமும் எமக்காக பரிந்துரைக்க மன்றாடுகிறோம்.

ஆமென்.

வெளியீடு
தகவல் தொடர்பு குழு
தெலசால் சபை, இந்திய மறைப்பணித்தளம்.
இளைஞர் நகர் புல்லூத்து, நாகமலை, மதுரை – 625019

அடுத்த இதழில் ஏப்ரல் மாதச் சிந்தனையைத் தொகுத்து வழங்குபவர் : அருட்சகோ. அருள்சாமி FSC, மதுரை

Lasal For India · De La Salle Bros-LASAD India · www.lasalleindia.org